1981 மார்ச் 6]

Report of Hon. Murugesan Commission.

*Q. No. 404—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(a) whether the report of the Hon'ble Murugesan Commission into the circumstances leading to the death of two life prisoners in Thiruchi Central Prison has been received by the Government ; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு மரணங்கள் குறித்து, திருச்சி சிறையிலே மட்டும் அல்ல:, மாநிலத்திலே இருக்கக்கூடிய பல்வேறு சிறைகளிலே இன்னும் அந்தப் பதட்டம், தங்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற நிலை இருப்பதால், நான் கேட்க விரும்புவது, நடந்தது, Public Enquiry. It is Public Enquiry Commission Report. ஆகவே, அந்த ரிப்போர்ட்டிலே அந்த இரண்டு மரணங்களைப் பற்றி, conclusions and recommendations என்ன என்பதை இந்த அவைக்குச் சொல்ல வேண்டும். It is not secret document.

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசாரணைக் கமிஷன் ஆய்வுக்குப் பின்னால் அந்த அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்து, அது முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, தற்போது சுற்றாணை குறிப்பாக அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் 4, 5 தினங்களில் அரசு அதைப் பற்றி முடிவெடுத்து இந்த அவையில் கண்டிப்பாக அறிவிக்கப்படும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(திரு. ரா. உமாநாத் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் தெளிவாக இருக்கின்றது. இரண்டாவது கேள்வியை உங்களுக்கு அனுமதிப்பது சரி. அதற்காக ஒன்றுமே இல்லாமல் கேட்பது சரியல்ல.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்த ரிப்போர்ட்டை அரசுக்குக் கொடுத்து நீண்ட நாட்கள் ஆகின்றன. அதைப் பரிசீலனை செய்து அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் இவ்வளவு டிலே ஆகிறது. அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாலே எழுப்பிய வினாவிலே சொன்னார்கள். இந்த விசாரணை மற்ற சிறைகளிலே உள்ள நிலைமைகளை எல்லாம் சரிப்படுத்தக்கூடிய அளவுக்கு உறுதுணையாக அமையும் என்ற பொருளிலே, அங்கும் பதட்ட நிலை இருக்கின்றது என்றும் சொன்னார்கள். எனவேதான் இந்த நிகழ்ச்சி பற்றிய விசாரணை என்று குறுகிய அளவுக்கு மட்டும் இல்லாமல் ஆழ்ந்து ஆராய்ந்து அந்த அடிப்படையில் இதுபோன்ற சம்பவம் மீண்டும், '' பிரிவென்டிவ் மெஷர்ஸ் '' தடுப்பு நடவடிக்கைகள் என்னென்ன செய்யலாம் என்பது பற்றியும் அரசு ஆய்வு செய்ய வேண்டுமென்ற காரணத்தால்தான், அதை ஆய்வு செய்வதற்கு சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் 4, 5 தினங்களுக்கு சுற்றாணை முடிந்த பிறகு அடுத்த தொடர் கூட்டத்திலே இந்த அவைக்கு அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கடன் ரத்து சலுகை.

*வினா எண் 405 : திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடன் ரத்து சலுகை 5 ஏக்கருக்குக் குறைவானவர்களுக்கு என்று அரசு அறிவித்துள்ளது கடன் பெற்ற விவசாயியின் தற்பொழுது உள்ள நிலவுடமை கணக்குப்படியா?

(ஆ) ஆம் என்றால் கர்ணம் சான்றிதழ் கோரப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) கடன் வழங்கிய தேதியில் உள்ள நிலஉடமைக் கணக்குப்படி கடன் ரத்து சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.